**இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபை - 2023**

**------------------------------------------------------------------------**

**1. நிதிக் கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அதிகாரசபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது அதிகாரசபையை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும்

கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரஅதிகாரசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- அதிகாரசபையின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை அதிகாரசபையினால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான சொத்துக்களின் தேறிய ஏட்டுப் பெறுமதி ரூபா 451.02 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களில் அவை ரூபா 449.54 மில்லியன் தொகை என மீண்டும் வெளியிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அதற்குரிய கணக்கீட்டுப் பதிவு இலக்கம் 10 இன் படி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி கிரயம் ரூபா 660.99 மில்லியன் தொகை எனவும் திரண்ட பெறுமானத் தேய்வுப் பெறுமதி ரூபா 112.54 மில்லியன் தொகை எனவும் காட்டப்பட்டிருந்த போதிலும், இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 01 இன் பந்திகள் 29 மற்றும் 53 இற்கு இணங்க ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | அதிகார சபைக்குச் சொந்தமான ஒவ்வொரு சொத்துக்கள் தொகுதியின் கீழ் பேரேட்டில் காணப்பட்ட மீதிக்காக கொள்வனவு செய்யப்பட்ட கிரயம் மற்றும் சொத்தின் பௌதீகத் தன்மை தொடர்பாக தகவல்கள் போதியளவினாக காணப்படாமையால் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு முடியாமல் போனது. எதிர் காலத்தில் இது தொடர்பாக முறையான நடவடிக்கை எடுப்பதற்காக செயற்படுவோம். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 02 | | |
| (i) செயற்பாட்டுத் தொழிற்பாடுகள் மூலம் உருவாக்கப்பட்ட காசுப்பாய்ச்சலின் கீழ் தொழிற்படு மூலதன மாற்றங்களை சீராக்கல் செய்யும் போது பெற வேண்டிய கணக்கு மீதிகள் குறைந்திருந்ததால் காணப்பட்ட ரூபா 26.14 மில்லியனிற்கான காசு உட்பாய்ச்சல் சீராக்கல் செய்திருக்காததுடன், ஏனைய நடைமுறை சொத்துக்களின் அதிகரிப்பின் மூலம் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 2.13 மில்லியன் தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | செற்பாட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் தொழிற்படு மூலதன மாற்றம் சீராக்கல் செய்யும் போது ஒட்டுமொத்த நடைமுறைச் சொத்துக்களின் மாற்றங்களை சீராக்கல் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதாவது, ஒட்டுமொத்த நடைமுறை சொத்துக்களின் அதிகரித்தல் (பெற வேண்டிய வட்டி தவிர) காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 148.07 மில்லியன் காசுப்பாய்ச்சல் கூற்றின் தொழிற்படு மூலதன மாற்றங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கபட்டிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டின் போது நிலையான வைப்புக்களில் மற்றும் திறைசேரி பிணை முறிகளில் | 2023 ஆண்டின் போது அதிகார சபையினால் நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 104.09 மில்லியனாக இருந்ததுடன், | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | |
| --- | --- | --- |
| முறையே ரூபா 5.54 மில்லியன் தொகை மற்றும் ரூபா 20.18 மில்லியன் தொகை முதலீடு செய்யப்பட்டிருந்த போதிலும், அந்தப் பெறுமதிகள் முதலீட்டு தொழிற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சல் என காசுப் பாய்ச்சல் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | திறைசேரி பிணைமுறிக்காக 2023 ஆண்டின் போது கூட்டப்பட்டிருந்த பெறுமதி ரூபா 1.91 மில்லியன் தொகையாகும் அதன் காரணமாக அந்த மொத்தப் பெறுமதியும் ரூபா 106 மில்லியன் முதலீட்டுப் பெறுமதி சரியாக முதலீட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | |
| (iii) கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி மீளாய்வாண்டின் போது ரூபா 1.033 மில்லின் தொகை பெறுமதியான ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் தனதாக்கப்பட்டிருந்த போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுத் தொழிற்பாடுகளின் கீழ் காசு வெளிப்பாய்ச்சல் என ரூபா 72.13 மில்லியன் தொகை காட்டப்பட்டிருந்தது. மேலும், மீளாய்ாவாண்டில் மூலதனப்படுத்தப்பட்ட ரூபா 66.54 மில்லியனிற்கான நடைமுறை வேலை முதலீட்டுத் தொழிற்பாடுகளிலிருந்து காசு உட்பாய்ச்சல் என காட்டப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கும் போது ஐந்தொகை மற்றும் அதற்குரிய குறிப்புக்களின் பெறுமதிகளை தொடர்புபடுத்திய போது இது ஏற்பட்டிருந்தது. எனினும், இதன் மூலம் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு தொழிற்பாடுகளின் மூலம் உருவாகிய தேறிய காசுப்பாய்ச்சலுக்கு தாக்கமொன்றை ஏற்படுத்தியிருக்கவில்லை என நம்புகின்றேன். அதேபோல் கணக்காய்வின் அவதானிப்பின் படி2024 நிதிக்கூற்றுக்கள் இணக்கஞ் செய்யும் போது இதனை சரி செய்து சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன் என. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07 | | |
| (i) முறையான அங்கீகாரம் இன்றி மீளாய்வாண்டின் போது ரூபா 85.9 மில்லியன் கிரயத்தையுடைய 12 காற்று அளவை கோபுரங்கள் மற்றும் 02 இன்வர்டர்கள் ஏடுகளில் இருந்து அகற்றப்பட்ட போதிலும், நியமத்தின் பந்தி 81 இற்கு இணங்க அதன் மூலம ஏற்பட்டிருந்த அனுகூலம் அல்லது பிரதிகூலத்தை கணித்து நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொண்டிருக்கவில்லை. | இந்த இன்வர்டர்களை மீண்டும் திருத்த வேலை மேற்கொண்டு கண்காட்சி பொருளொன்றாக அல்லது கல்வி விடயங்களுக்கு பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். காற்று கோபுரங்கள் 2012 ஆண்டில் அப்புறப்படுத்தப்பட்டு இருந்ததுடன், காற்று கோபுரங்களின் வரலாற்றுக் கிரயம் மற்றும் உரிய ஏனைய தகவல்கள் சரியாக கண்டறிய முடியாமையால் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் மேற்கொள்வதற்கு முடியாமல் போனதால், நிதிக்கூற்றுக்களில் குறிப்பொன்று மூலம் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. 2020 ஜனவரி மாதத்தில் பணிப்பாளர் | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க சொத்துக்களை ஏடுகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நாயகத்தினால் நியமனம் செய்யப்பட்ட உள்ளக விஷேடத்துவ குழுவின் பரிந்துரையின் மீது 04 காற்றுக் கோபுரங்கள் அகற்றுவதற்கு பரிந்துரைக்கப்பட்டது. | |
| (ii) நியமத்தின் பந்தி 14 இற்கு இணங்க சொத்து விடயம் மற்றும் அதனைச் சார்ந்த எதிர்கால பொருளாதார நலன்கள் அல்லது சேவைச் திறன்கள் நிறுவனத்திற்கு உட்பாயும் சாத்தியக்கூறு காணப்பட்ட போது குறிப்பிட்ட கிரயம் சொத்தொன்றென இனங்காண வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான சாத்தியக்கூறு காணப்படாத சியம்பலாண்டுவ சூரியவலுச் செயற்திட்டத்திற்கு உரித்தாக்கவதற்கு உத்தேசித்துள்ள காணியின் எல்லைத் தூண்கள் நடுவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1.03 மில்லியன் செலவொன்று நிலையான சொத்துக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சியம்பலாண்டுவ காணி அதிகார சபைக்கு சட்டரீதியாக குத்தகை உரிமை உரித்தாக்குவதற்கு தேவையான அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதிகார சபையினால் குறிப்பிட்ட பிரதேச செயலகத்திற்கு ஆரம்ப அலுவல்களுக்காக குத்தகை தொகை 2023 ஆண்டு செலுத்தப்பட்டிருந்தது. வரைபு குத்தகை உடன்படிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அங்கீகாரம் கிடைத்ததுடன். குத்தகை உடன்படிக்கை கையொப்பமிடப்படவுள்ளது. அதன் காரணமாக இந்த எல்லைத் தூண்கள் நடுவதன் மூலம் சொத்துக்களை இனங்காணல் மற்றும் ஏனைய கருமங்களுக்காக பங்களிப்பு ஒன்று வழங்கப்படுவதனால் எல்லைத் தூண்கள் நடுவதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த கிரயத்தை மூலதனப்படுத்தப்பட்டது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (iii) நியமத்தின் பந்தி 42 இற்கு இணங்க மீள்மதிப்பீடு செய்யப்பட்ட நாள் முதல் தொடர்ந்து திரண்ட பெறுமானத் தேய்வு கணிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 ஆகஸ்ட் 31 மற்றும் திசெம்பர் 31 திகதி மேற்கொள்ளப்பட்டிருந்த சொத்துக்களின் மீள்மதிப்பீட்டுப் பெறுமதியின் மீது 2023 முழு ஆண்டுக்குமான பெறுமானத் தேய்வு கழித்து ரூபா 112.54 மில்லியன் தொகை பெறுமானத் தேய்வு என நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது. | நிலைபேறுதகு வலு அதிகாரசபையினால் கடைபிடிக்கப்படுவது சொத்துக்கள் கொள்வனவு செய்த ஆண்டிற்காக மொத்தப் பெறுமானத்தை சீராக்கல் மேற்கொள்வதற்கும் அப்புறப்படுத்தும் ஆண்டுக்காக பெறுமானத் தேய்வு சீராக்கல் செய்யமால் விடுவதும் ஆகும். இந்தச் சொத்துக்களின் மீள்மதிப்பீடு கால தாமதமடைந்த போதிலும் இந்த அனைத்துச் சொத்துக்களும் 2022 ஆண்டிற்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களாக காணப்படுவதுடன், அனேக சொத்துக்கள் முழுமையாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்டிருந்த | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | சொத்துக்களாகும். அதன் காரணமாக இந்த சொத்துக்கள் ஆண்டு பூராகவும் அதிகாரசபையினால் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் முழு ஆண்டிற்குமான பெறுமானத் தேய்விற்கான சீராக்கல் மேற்கொள்வதன் மூலம் நிதிக்கூற்றுக்களுக்கு முக்கியமான தாக்கமொன்றினை ஏற்படுத்தாமையால் மிகவும் பலன் தரக்கூடிய பெறுமதியொன்றினை சித்தரித்துக் காட்டுகின்றது எனவும் எனது நம்பிக்கையாகும். அதிகார சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் முன்னைய ஆண்டுகளிற்கான தகவல்கள் காணப்படாமையால் தற்போது காணப்படுகின்ற தகவல்களின் படி நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | |
| | (iv) 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 259,095 தொகை பெறுமதியான 266 செயற்படாத உபகரண விடயங்கள் தொடர்பாக நியமத்தின் பந்தி 79 இற்கு இணங்க எதுவித ஒதுக்கமும் மேற்கொண்டிருக்காததுடன் பந்திகள் 86 மற்றும் 91 இற்கு இணங்க தேவையான வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வின் பரிந்துரையின் படி அடுத்த நிதிக்கூற்றுக்களில் இந்த தகவல்களை சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | 1979 இன் 08 ஆம் இலக்க அரச காணிகளை தனதாக்கும் சட்டத்தின் கீழ் 2017 ஆண்டின் போது அதிகார சபையினால் கைப்பற்றியிருந்த 2020 ஆண்டின் போது ரூபா 7.8 மில்லியன் தொகைக்கு தனியார் கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டிருந்த அவிஸ்ஸாவலையில் அமைந்துள்ள 0.62 ஹெக்டயர் காணி இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 13 இற்கு இணங்க முதலீட்டு ஆதனங்கள் என இனங்கண்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | காணிகளை தனதாக்கும் அலுவல்களை பூர்த்தி செய்வதற்காக காணிச் சட்டத்தின் 6.1 பூர்த்தி செய்த பின்னர் காணியின் சட்டரீதியான ஆவணங்கள் நிலைபெறுதகு வலு அதிகாரசபைக்கு கிடைப்பதுடன், அதன்பின்னர் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் பெறுமதி மதிப்பீடு செய்த பின்னர் ஏடுகளில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 19 - ஊழியர் நலன் நியமத்தின் பந்தி 76 இற்கு இணங்க பணிக்கொடை ஒதுக்கம் இயற்கணிப்பு பெறுமதி | ஊழியர் நலன்கள் தொடர்பான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 19 | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட |

| | | |
|---|---|---|
| மதிப்பீட்டு முறையொன்று கடைபிடிக்கப்பட்டு கணிக்கப்பட்டிருக்காததுடன், நியமத்தின் பிரிவு 141 இற்கு இணங்க தேவையான வெளிப்படுத்தல்கள் நிதிக்கூற்றுக்களில் மேற்கொண்டிருக்கவில்லை. மேலும் நிதி நிலைமைக் கூற்றின் படி பணிக்கொடை ஒதுக்கம் ரூபா 40.7 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், அட்டவணையின் படி ரூபா 40.4 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் ரூபா 340,821 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | (SLPSAS – 19) இன் 76 பந்திக்கு இணங்க உரிய முறையில் ஓய்வுதிய நலன்களின் பெறுமதி கணித்தல் அது தொடர்பான சிறந்த அனுபவம் உள்ள தரப்பினர்களினால் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன், அவ்வாறான 02 நிறுவனங்கள் தொடர்பாக தகவல்கள் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும், அவர்கள் எவரும் கூறுவிலைகள் சமர்ப்பித்திருக்காமையால் முன்னைய ஆண்டில் நலன்கள் கணிக்கப்பட்ட முறையில் கணிக்கப்பட்டது. | வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீள்மதிப்பு செய்யப்படாத கட்டிடங்களின் ஆரம்ப கிரயம் என முன்னைய ஆண்டின் தேறிய பெறுமதியாகிய ரூபா 86.28 மில்லியன் தொகை மீது மீளாய்வாண்டின் பெறுமானத் தேய்வு கணித்த காரணத்தினால் மீளாய்வாண்டு மிகை மற்றும் கட்டிடங்களின் தேறிய பெறுமதி ரூபா 3.75 மில்லியன் தொகையினால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | சொத்துக்களை மீள்மதிப்பீடுகளை கணக்கீடு செய்யும் போது தவறுதலாக இது ஏற்பட்டிருந்ததுடன், இது தொடர்பாக கணக்கீட்டு அலுவல்கள் சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கும் படி அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க அடுத்த கணக்காண்டின் போது கடந்த காலத்திற்கு பொறுத்தமாக சரி செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | சியம்பலாண்டுவ செயற்திட்டத்தின் மீள் காடு வளர்ப்புக்காக கடந்த ஆண்டின் போது வன பாதுகாப்புத் திணைக்களத்திற்கு வழங்கியிருந்த ரூபா 12.78 மில்லியன் முற்பணத் தொகை நடைமுறை வேலை என பிழையாக கணக்கீடு செய்திருந்தமையை மீளாய்வாண்டின் போது சரி செய்யப்பட்டிருந்ததுடன், முற்பணம் செலவிடப்பட்ட விபரங்கள் தொடர்பான தகவல்கள் பெற்றுக்கொள்ளாமல் மொத்தப் பெறுமதியையும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | அதிகாரசபை இங்கு செயற்பட்டிருந்தது செயற்திட்டத்தின் அபிவிருத்தியாளர் செய்முறைக்கு சமமான செய்முறை ஒன்றிலேயே ஆகும். செயற்திட்டத்தை வெற்றியடையச் செய்தல் மற்றும் வன பாதுகாப்புத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் குறிக்கோளுடன் வன பயிர்ச் செய்கை அலுவல்களுக்காக ரூபா 12.78 மில்லியன் தொகையொன்று வன பாதுகாப்புத் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டது. இந்தத் தொகை | செலவிடப்பட்ட தொகைக்குரிய மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் விபரங்களை பெற்றுக்கொண்டு அதன்படி செலவுகளை கணக்கீடு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| | வன பயிர்ச் செய்கைக்காக வழங்கியிருந்த பங்களிப்புத் தொகையொன்றாகும். செயற்திட்டத்துடன் நேரடியாக தொடர்பு இல்லாத பங்களிப்புத் தொகை (மூலதனப்படுத்த முடியாத) அந்த செலவு மேற்கொள்ளப்பட்ட வருடத்திலேயே வருமானத்திற்கு எதிராக சீராக்கல் செய்யப்பட வேண்டியமையால் அதனை 2022 ஆண்டு செலவொன்றென கணக்கீடு செய்யப்பட்டது. | |

### 1.5.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ள ரூபா 25.45 மில்லியனிற்கான 02 பொறுப்பு விடயங்களுக்காக மற்றும் ரூபா 2.8 மில்லியனிற்கான சொத்து விடயம் ஒன்றிற்கான விரிவான அட்டவணைகள், பில் பத்திரங்கள், மீதிகளை உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | அட்டுருச் செலவுகள் மற்றும் தடுத்து வைத்தல் பணத்திற்கான விரிவான அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் NAMA செயற்திட்டத்திற்குரிய செலவு அறிக்கைகள் அதிகார சபைக்கு சமர்ப்பிக்கும் படி தென் மாகாண சபைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அதன் பிரதியொன்று கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குறிப்பிட்ட சான்றுகள் விரைவாக கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 செலுத்த வேண்டிய கணக்கு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 19 சிறிய நீர் மின்சார செயற்திட்டங்களின் முதலீட்டாளர்களினால் காணிகளை தனதாக்களுக்காக வழங்கியிருந்த தொகையில் மீதியான ரூபா 5.6 மில்லியன் தொகை நடைமுறைப் பொறுப்புக்கள் என நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன், அவற்றில் 05 வருடங்களை மிகைத்துள்ள தீர்க்கப்படாத ரூபா 4.2 மில்லியன் மீதியொன்றும் காணப்பட்டது. காணிகளை தனதாக்கும் அலுவல்களை விரைவாக பூர்த்தி | அதிகாரசபைக்குச் சொந்தமாக காணிகள் தொடர்பாக கடமையாற்றுவதற்காக ஒரு உத்தியோகத்தர் மாத்திரமே காணப்பட்டுள்ளார். இந்த நாட்களில் செயற்படுத்தப்படுகின்ற சியம்பலாண்டுவ, பூநகரி மற்றும் மன்னார் மீள்புத்தாக்க வலு செயற்திட்டங்களுக்காக அவர் வேலைப் பழுவுடன் காணப்பட்டார். இத்றகாக எதிர் காலத்தில் அதிகார சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை | குறிப்பிட்ட பணம் காணி தனதாக்கல் அலுவல்களுக்காக பயன்படுத்தி செயற்திட்டங்களுக்கு தேவையான காணிகளை விரைவாக பெற்றுக்கொண்டு முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| செய்து முதலீட்டாளர்களுக்கு வழங்கியிருக்காமை இதற்கான காரணமாக இருந்தது. | மீண்டும் தாபித்து காணி சிக்கல்களை கூடிய விரைவில் தீர்த்துக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுப்பேன். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரச் சட்டம் | | | |
| (i) | பிரிவு 3 | இலங்கை நிலைபெறுதகு வலு அதிகாரசபையின் பணிப்பாளர் சபை பதவி முறையால் நியமனம் செய்யப்படும் 12 அங்கத்தவர்களும் மற்றும் அமைச்சரினால் நியமனம் செய்யப்படும் 09 அங்கத்தவர்களும் அடங்கிய அங்கத்தவர்கள் 21 பேரைக் கொண்டிருக்க வேண்டியிருந்த போதிலும், 2024 மார்ச் 31 திகதி அளவிலும் அமைச்சரினால் நியமனம் செய்யப்பட வேண்டிய ஒரு அங்கத்தவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | தலைவரின் 2024.05.16 திகதிய கடிதத்தின் மூலம் கௌரவ அமைச்சருக்கு வேண்டுகோளொன்று சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் இதுவரை அந்த நியமனம் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிக குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணங்கள் 104 மற்றும் 110 | செயற்படாமல் காணப்பட்ட ரூபா 20 மில்லியன் பெறுமதியான இரண்டு இன்வேடர்கள் தொடர்பாக குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இந்த செயற்படாதிருந்த இன்வேடர்களை மீண்டும் திருத்த வேலை மேற்கொள்வதற்குரிய இயலுமையை கண்டறியப்பட்டு வருகின்றது. அதனை காட்சிப் பொருளொன்றாக அல்லது கல்வி அலுவல்களுக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (இ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய 01/2020 இலக்கம் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை | | | |
| (i) | பந்தி 11 | அதிகாரசபையின் 2023 ஆண்டின் பண்டக் கணிப்பீட்டு அறிக்கை 2024 ஆகஸ்ட் அளவிலும் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | வருடாந்த பண்டக் கணிப்பீட்டு அறிக்கை கடைசிக் கட்டத்தில் காணப்படுவதுடன், 2024.08.31 திகதி அளவில் உள்ளகக் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவிற்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கின்றேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ii) | பந்தி 15.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நி.பி. 877(1)(இ)(ஈ) மற்றும் 877(2)(இ) பிரிவுகள் | அதிகாரசபையின் கீழ் காணப்படுகின்ற இலங்கை நிலைபெறுதகு வலு நிதியம் மற்றும் நிலைபெறுதகு வலு பிணை நிதியத்திற்காக 2021, 2022, 2023 மற்றும் 2024 ஆண்டுகளுக்காக பாதீடு தயாரித்திருக்காததடன், நிதியங்களின் பெறுவனவு மற்றும் கொடுப்பனவு கணக்குப் பதிதல், காலாண்டு அறிக்கைகள் மற்றும் இறுதிக் கணக்குகள் தயாரித்தல், அரச நிதித் திணைக்களத்தினால் வழங்கியிருந்த வழிகாட்டல் படிவத்திற்கு இணங்க மேற்கொண்டிருக்கவில்லை. | இந்த நிதியத்தை பயன்படுத்தும் செய்முறை உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், எதிர் காலத்தில் நிதியத்தை பயன்படுத்தும் போது அதன்படி நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுவேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஈ) | 2021 நவம்பர் 16 திகதிய அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 | | | |
| (i) | அரச தொழில் முயற்சிகளின் கூட்டிணைந்த கட்டுப்பாட்டிற்கான வழிகாட்டல் கோவையின் பந்தி 4.3 | அதிகாரசபையின் பல்வேறு துறைகளில் காணப்படுகின்ற ஆபத்து நிலையை மதிப்பீடு செய்வதற்காக குழுவொன்று நியமனம் செய்திருக்காததுடன், அதிகார | குழு விரைவாக நியமனம் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதிகார சபையில் காணப்படுகின்ற உக்கிர ஊழியர் | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | மற்றும் பின் இணைப்பு 01 இன் பந்தி 1 | சபையினால் மூலோபாயத் திட்டத்திற்கு இணங்க எதிர்வு கூறப்பட்ட நிதிக்கூற்றுத் தொகுதியொன்று தயாரித்திருக்கவில்லை. | பற்றாக்குறையின் காரணமாக, நிதிப் பிரிவின் அன்றாட கருமங்களை பேணிச் செல்வது மிகவும் அசௌகரிகங்களுடனேய ாகும். எதிர் காலத்தில் ஊழியர்கள் இணைக்கப்பட்டு அதன்படி நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுவேன். | |
| (ii) | அரச தொழில் முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் பந்தி 6.6 | அதிகார சபையினால் மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களுடன் வரைபு வருடாந்த அறிக்கை சமர்ப்பித்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் நிதிக்கூற்றுக்கள் உரிய தினத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுப்பேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (உ) | 2019 ஆகஸ்ட் 09 திகதிய 2135/61 இலக்கம் கொண்ட அதிவிஷேட வர்த்தமானியின் மூலம் வெளியிடப்பட்டிருந்த இலங்கை தேசிய வலுச் சக்திக் கொள்கை மற்றும் மூலோபாயக் கோவையின் 04 இலக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காலச் சட்டகம் | அதிகாரசபைக்கு சட்டரீதியாக பொறுப்புச் சாட்டப்பட்டிருந்த 10 கருமங்கள் தொடர்பாக அதிகார சபையினால் எதுவித நடவடிக்கைகளும் மேற்கொண்டிருக்கவில்லை. | இந்த வலுக் கொள்கையின் பிரதான பிரிவொன்றான 2030 ஆண்டில் 70 சதவீதமான மீள்புத்தாக்க வலு பிரதான முறைமையுடன் தொடர்புபடுத்துவதற்கான கொள்கைக்கு நிலைபெறுதகு வலு அதிகாரசபையினால் உதவி வழங்கப்பட்டது. அங்கு நில அளவை விடயங்களுக்காக மற்றும் ஏனைய விடயங்களுக்காக தலையிட்டமையால் அதற்காக பாரிய முயற்சியொன்று மேற்கொள்ள நேரிட்டது. மேலும், எதிர்பார்த்தவாறு ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி ஆகிய நிறுவனங்களினால் கிடைக்க வேண்டியிருந்த பணம் கிடைக்கப்படாமையால் (IMF Condition) இந்த | தேசிய வலுக் கொள்கைக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | செயற்பாடுகளை நடாத்திச் செல்ல முடியாதிருந்தது. எனினும், சந்தரப்பத்திற்கு ஏற்றவாறு முடியுமான அனைத்து செயற்திட்டங்களும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. |

**1.8 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி சட்டத்தின் முதலாவது பகுதியின் அத்தியாயம் (ii) இல் 06 ஆம் 07 ஆம் பந்திகளுக்கு இணங்க அதிகார சபையினால் வரிக்கு உள்ளடங்கும் வருமானங்கள் மற்றும் முதலீடுகள் வருமானம் உழைத்த போதிலும் அந்தச் சட்டத்தின் பந்தி 126(i) இற்கு இணங்க வரித் திரட்டுகள் சமர்ப்பித்து அந்த சட்டத்தின் பந்தி 145 இற்கு இணங்க வரி செலுத்தியிருக்கவில்லை. அதன்படி, அதிகார சபையினால் 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது முறையே ரூபா 105.54 மில்லியன் மற்றும் ரூபா 88.08 மில்லியன் தொகைக்கான மிகை ஒன்றும் ரூபா 34.8 மில்லியன் மற்றும் ரூபா 175 மில்லியனிற்கான மூதலீட்டு வருமானமும் உழைத்திருந்த போதிலும், வருமான வரிக்காக எதுவித ஏற்பாடுகளும் மேற்கொண்டிருக்கவில்லை. மேலும், அந்தச் சட்டத்தின் பிரிவு 93(1) மற்றும் 2021 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்திய) சட்டத்தின் பிரிவு 113(1) இற்கு இணங்க அதிகாரசபையினால் 2018 ஆண்டு முதல் 2023 நவம்பர் 30 திகதி வரை வருமானத் திரட்டுக்கள் கோப்பிட்டிருக்கவில்லை. | நிலைபெறுதகு வலு அதிகார சபை, திறைசேரி மீது தங்கியுள்ள அதிகார சபையொன்றாக காணப்படுவதனால் மற்றும் திறைசேரியின் மூலம் கிடைக்கின்ற ஏடுபாடுகளை கழித்த பின்னர் நட்டமொன்று காணப்படுவதனால் வரிக்காக ஏற்பாடுகள் ஒதுக்கப்படாததுடன், கணக்காய்வு ஐயவினாவின் படி வருமான வரிக்காக பதிவு செய்து வருமான வரி செலுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. 2024 ஆண்டில் வருமான வரிக்காக பதிவு செய்யப்பட்டதனால் இலத்திரனியல் வருமான வரி திரட்டு எமக்கு அனுப்பும் படி உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தை வேண்டப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் அதன்படி தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | வரிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 88.1 மில்லியன் இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மிகை ரூபா 105.5 மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 17.4 மில்லியனிற்கான இற்கான பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. மீளாய்வாண்டின் போது வலு நிதியத்தின் வருமானம் ரூபா 75.1 மில்லியனினால் வீழ்ச்சியடைதல் மற்றும் ஆண்டிற்கான பெறுமானத் தேய்வுச் செலவு ரூபா 61 மில்லியனினால் அதிகரித்தல் இந்த பின்னடைவிற்கு பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான நிதிக்கூற்று விடயங்களின் முரண்பாடுகளின் பகுப்பாய்வு

முன்னைய மூன்று(03) ஆண்டுகளுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் பிரதான விடயங்களின் அதிகரித்தல் அல்லது குறைவடைதல் மற்றும் அந்த அதிகரித்தல் மற்றும் குறைவடைவதின் சதவீதத்தை பகுப்பாய்வு செய்து கீழே காண்பிக்கப்படுகின்றது.

| நிதிக்கூற்று விடயம் | 2023 | 2022 | 2021 | 2020 | கருத்துரை |
|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டு வருமானம் (ரூ.மி)** | **228** | **217** | **415** | **295** | செயற்பாட்டு வருமானத்தில் குறைந்த பெறுமதி 2022 ஆண்டில் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், 2021 ஆண்டின் போது வழங்கியிருந்த திறைசேரியின் மூலதன மானியம் 2022 ஆண்டின் போது பாரியளவில் குறைத்திருத்தல் இதற்கான காரணமாக இருந்தது. |
| முரண்கள் (ரூ.மி) | 11 | (198) | 120 | 14 | |
| அதிகரித்தல் / (குறைவடைதல்) (%) | 5 | -48 | 41 | 5 | |
| **செயற்பாடுகள் அல்லாத வருமானங்கள் (ரூ.மி)** | **278** | **340** | **61** | **41** | 2022 ஆண்டின் போது நிலைபெறுதகு வலு நிதியத்தின் பணம் முதலீடு செய்யப்பட்டமையால் அந்த ஆண்டிலிருந்து செயற்பாடு அல்லாத வருமானங்கள் பாரியளவில் அதிகரித்திருந்ததுடன், 2022 ஆண்டிற்கு ஒப்பாக 2023 ஆண்டின் போது வலுச் செயற்திட்டங்களுக்காக கிடைத்திருந்த விண்ணப்பக் கட்டண வருமானம் குறைந்திருந்தது. |
| முரண்கள் (ரூ.மி) | (62) | 279 | 20 | (45) | |
| அதிகரித்தல் / (குறைவடைதல்) (%) | -18 | 457 | 49 | -52 | |
| **செயற்திட்டச் செலவுகள் (ரூ.மி)** | **98** | **200** | **64** | **59** | 2022 ஆண்டின் போது அதிகார சபையினால் பாரியளவிலான சூரிய வலு |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| முரண்கள் (ரூ.மி) | 102 | 136 | 5 | (41) | பூங்கா செயற்திட்டத்தின் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக பாரியளவில் செலவிடப்பட்டிருந்தது. |
| அதிகரித்தல் / (குறைவடைதல்) (%) | 51 | 212 | 8 | -41 | |
| **மீண்டுவரும் செலவுகள் (ரூ.மி)** | **320** | **251** | **231** | **234** | 2023 ஆண்டின் போது சொத்துக்களை மீள்மதிப்பீடு செய்த காரணத்தினால் பெறுமானத் தேய்வுச் செலவுகளின் அதிகரிப்பிற்கு மீண்டுவரும் செலவு அதிகரித்தலுக்கு காரணமாக இருந்தது. |
| முரண்கள் (ரூ.மி) | 69 | 20 | (3) | 14 | |
| அதிகரித்தல் / (குறைவடைதல்) (%) | 27 | 9 | -1 | 6 | |
| **முதலீடுகள் (ரூ.மி)** | **633** | **522** | **68** | **112** | நிலைபெறுதகு வலு நிதியத்தின் பணம் தொடர்ச்சியாக முதலீடு செய்யப்பட்டிருந்தமையால் முதலீடுகள் அதிகரிப்பதற்கு காரணமாக இருந்தது. |
| முரண்கள் (ரூ.மி) | 111 | 454 | (44) | 10 | |
| அதிகரித்தல் / (குறைவடைதல்) (%) | 21 | 668 | -39 | 10 | |
| **பணம் மற்றும் பணத்திற்கு சமமானவைகள் (ரூ.மி)** | **723** | **201** | **587** | **460** | முறையான முதலீட்டுத் திட்டமொன்று மற்றும் நிதி எதிர்வுகூறல் ஒன்றின்றி குறுகிய கால வைப்புக்களில் பணம் வைப்புச் செய்தல் இதற்கான காரணமாக இருந்தது. |
| முரண்கள் (ரூ.மி) | 522 | (386) | 127 | 23 | |
| அதிகரித்தல் / (குறைவடைதல்) (%) | 260 | -66 | 28 | 5 | |

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

| **விகிதாசாரம்** | **2023** | **2022** | **2021** | **2020** | **2019** |
|---|---|---|---|---|---|
| நடைமுறைச் சொத்துக்கள் விகிதாசாரம் (தடவைகள்) | 3.33 | 8.51 | 21.63 | 21.07 | 13.58 |
| மொத்தச் சொத்துக்களின் நலன்கள் விகிதாசாரம் (%) | 3.51 | 6.45 | 13.26 | 3.54 | 3.79 |
| உரிமை மீது | 4.16 | 6.84 | 13.26 | 3.54 | 3.79 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நலன்கள் விகிதாசாரம் (%) | | | | | |
| தேறிய மிகை (இலாபம்) விகிதாசாரம் (%) | 38.6 | 48.38 | 43.85 | 14.57 | 16.37 |
| சொத்துக்கள் பிறழ்வு விகிதாசாரம் (தடவைகள்) | 0.09 | 0.13 | 0.30 | 0.24 | 0.23 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2007 – 2009 ஆண்டுகளின் போது 03 மின்சார வாகன மாதிரிகள் உற்பத்தி செய்வதற்காக அதிகாரசபையினால் தனியார் கம்பனி ஒன்றிற்கு ரூபா 7.8 மில்லியன் தொகையொன்று வழங்கியிருந்தது. 2012 திசெம்பர் 07 திகதி பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தின் கட்டளைக்கு இணங்க 2013 ஜனவரி 04 திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் கூடியிருந்த குழுவில் இந்த கருமத்துடன் தொடர்புடைய உத்தியோகத்தருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்கும், இது தொடர்பான உண்மை நிலைமையை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கு மூலம் பொது முயற்சிகள் குழுவிற்கு அறிவிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், இதனொடு தொடர்புடைய உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை ஏதும் மீளாய்வாண்டு இறுதி வரை எழுத்திருக்கவில்லை. மேலும், அதிகாரசபையினால் குறிப்பிட்ட தனியார் கம்பனிக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக காலவதியாகியிருந்த | இது தொடர்பாக உள்ளக விசாரணை ஒன்று மேற்கொண்டு பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. 2024.07.02 திகதி அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக தகைமையுடைய குழுவொன்று நியமனம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், குழுவின் அறிக்கை எதிர் காலத்தில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | குழுவின் கட்டளைக்கு இணங்க செயற்படுவதுடன், அரசிற்கு நட்டம் ஏற்படாதவாறு குறிப்பிட்ட விடயங்களை நிறைவேற்றிக்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | உடன்படிக்கையின் 19 ஆவது நிபந்தனைக்கு இணங்க நடுவர் செய்முறை ஒன்றில் நுழைந்திருந்தது. அங்கு 03 மின்சார வாகன மாதிரிகளுக்கு பதிலாக ஒரு மாதிரி மாத்திரம் பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டு நடுத் தீர்ப்பு செய்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதியளவிலும் ஒரு மின்சார வாகன மாதிரியேனும் அதிகார சபை பெற்றுக் கொண்டிருக்கவில்லை. | | |

**3.2 முகாமைத்துவ மற்றும் செயற்பாட்டு அலுவல்கள்**

**(அ) 2007 இன் 35 ஆம் இலக்க இலங்கை நிலைபெறுதகு வலு அதிகார சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கருமங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இலங்கை மின்சார சபையின் மத்திய வலையமைப்பில் காணப்படுகின்ற கொள்திறன் (Available Grid Capacity) போதியளவாக காணப்படாமை சிக்கலுக்கான தீர்வு ஒன்றென அதிகாரசபைச் சட்டத்தில் பிரிவு 5(ஈ) இற்கு இணங்க மத்திய வலையமைப்புக்கு புறம்பாக (off grid) மீள்புத்தாக்க வலுச் செயற்திட்டங்களை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல் மேற்கொள்ள வேண்டிய போதிலும் அதிகாரசபையினால் அதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொண்டிருக்கவில்லை. இதன் காரணமாக சட்டத்தின் பிரிவு 25(அ) இணங்க 2024 ஜூலை அளவிலிருந்து மத்திய வலையமைப்புக்கு புறம்பாக எதுவித மீள்புத்தாக்க வலுச் செயற்திட்டமொன்றிக்கு வலு அனுமதிப்பத்திரம் வழங்கியிருக்கவில்லை. | 2021 அளவில் தேசிய மின்சார முறைமை நீடிக்கப்பட்ட சதவீதம் 98 வரை அதிகரித்திருந்தமையால் தேசிய முறைமைக்கு புறம்பாக மின்சாரம் வழங்க முடியாத 02 சதவீதத்திற்காக மின்சாரம் வழங்குவதற்கு தேவையான கட்டம் தரையின் அமைப்பு மற்றும் நிலைமையின் படி அதிகார சபை நடவடிக்கை எடுத்திருந்தது. மெதகலே, உடுகல தெபொக்க, கல முதுன போன்ற பிரதேசங்கள் தேசிய முறைமைக்கு நீடிக்க முடியாத இடங்கள் இனங்கண்டு மின்சாரம் வழங்குவதற்கு பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்ப முன்னேற்றத்துடன், மத்திய வலையத்துக்கு புறம்பாக மின்சார தேவைப்பாடுகள் காணப்படும் குழுக்கள் காணப்படின் அவர்களுக்காக அவர்களின் தேவைப்பாட்டின் மீது தனிப்பட்ட முறையில் மின்சாரம் பெற்றுக்கொள்ளும் செய்முறை காணப்படுகின்றது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க மத்திய வலையமைப்புக்கு புறம்பாக மீள்புத்தாக்க வலு செயற்திட்டங்கள் ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அவற்றிற்கு தேவையான தொழில்நுட்ப செய்முறை கைநூல் மற்றும் நியமங்கள் தயாரித்தல் அவ்வாறான தொகுதிகள் நிறுவுவதற்கு பயிற்சி அளிக்கப்பட்ட ஆட்களை அதிகார சபையினால் தொடர்ச்சியாக உருவாக்கல் மற்றும் தேவையான வழிகாட்டல் தயாரிக்கப்பட்டுள்ளது. அவற்றை எதர்காலத்தில் சட்ட வரைபுக்காக சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ii) | சட்டத்தில் 08 ஆவது பிரிவின் படி ஒவ்வொரு பிரதேசங்களிலும் மீள்புத்தாக்க வலு வளச் செறிவின் படி மீள்புத்தாக்க வலு வளங்களை அபிவிருத்தி செய்யும் திட்டமொன்று தயாரிக்கபட்டு அமைச்சரவை அங்கீகாரத்தின் மீது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதிகாரசபை நிறுவப்பட்டு 16 வருடங்கள் கடந்திருந்த போதிலும் 2024 ஜூலை அளவிலும் அவ்வாறான திட்டமொன்று வர்த்தமானியில் பிரசுரித்திருக்கவில்லை. | 2020 ஆண்டின் போது தயாரிக்கப்பட்டிருந்த மீள்புத்தாக்க வலுத் திட்டம் 2021 ஜூலை 21 திகதி பொதுமக்கள் கருத்து பெற்றுக்கொண்ட பின்னர் அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக 2021 நவம்பர் 26 திகதி சூரிய சக்தி, காற்று மற்றும் நீர் மின்உற்பத்தி செயற்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டது. பின்னர் 2024 பெப்ரவரி 27 திகதி அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் மின்சக்தி அமைச்சரினால் திருத்தப்பட்ட அமைச்சரவைப் பத்திரமொன்று சமர்ப்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இதன்படி, செயலாளரின் அறிவுரையின் படி (2024 – 2027) ஆண்டுகளுக்காக தயாரிக்கப்பட்ட மீள்புத்தாக்க வலுத் திட்டம் மீண்டும் அமைச்சரவை அங்கீகாரத்திற்காக 2024 மே 03 திகதி மின்சக்தி அமைச்சுக்கு அனுப்பப்பட்டது. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி விரைவாக மீள்புத்தாக்க வலு வளங்கள் அபிவிருத்தித் திட்டமொன்று வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட வேண்டும். |
| (iii) | சட்டத்தின் பிரிவு 19(1) இற்கு இணங்க வழங்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரங்கள் செயற்படுவது காலப்பகுதியில் அந்தக் காலப் பகுதியில் | மின் சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சுக்கு 2007 ஆண்டு முதல் நியமனம் செய்யப்பட்ட அனைத்து அமைச்சர்களுடனும் இந்த வேத்துரிமை அறவீடு | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க வேத்துரிமையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை விரைவாக நிறைவேற்றப்பட |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற மீள்புத்தாக்க வலு வளங்களுக்காக நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரை வினவி அமைச்சரினால் தீர்மானிக்கப்படுகின்ற ஏதேனும் கட்டணம் ஒன்று வேத்துரிமை என வருடாந்தம் அதிகாரசபைக்கு செலுத்துவதற்கு அபிவிருத்தியாளர்கள் கடப்பட்டிருக்க வேண்டும். எனினும், அதற்கான வேத்துரிமை அறவீடு செய்தல் தொடர்பாக செய்முறை இது வரை தீர்மானிக்கப்பட்டிருக்காமையால் குறிப்பிட்ட வேத்துரிமையை அறவீடு செய்வதற்கு அதிகாரசபைக்கு முடியாமல் இருந்தது. | செய்தல் தொடர்பாக அதிகார சபையினால் கலந்துரையாடப்பட்டது. பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த அறவீட்டிற்கான நிதியமைச்சரின் இணக்கத்தை பெற்றுக்கொள்வதற்கு அதிகாரசபை முயற்தி எடுத்தது. இவ்வாறு இந்த கருதுகோள்களை செயற்படுத்துவதற்கு தேவையான அமைச்சரவை பத்திரமும் தயாரிக்கப்பட்டு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சு இணங்கியவுடன், இந்த அறவீடு அதிகார சபையினால் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டும். |
| (iv) | சட்டத்தின் பிரிவு 45(1) நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் இணக்கத்துடன் அமைச்சரினால் வர்த்தமான பிரசுரிக்கப்படும் விதிகளுக்கு அமைய காலத்துக்கு காலம் தீர்மானிக்கப்படுகின்ற விகிதாசாரத்தின் படி கணிக்கப்படும் செஸ் வரியொன்று ஏற்றுமதி செய்யப்படும் அனைத்து படிமமாக்கப்பட்ட எரிபொருள் உற்பத்தி மீது விதித்தல், அறவீடு செய்தல் மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டியிருந்த போதிலும் அதற்கான செய்முறையொன்று தயாரித்திருக்காமையால் குறிப்பிட்ட கட்டணம் அறவீடு செய்வதற்கு முடியாமல் இருந்தது. | மின் சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சுக்கு 2007 ஆண்டு முதல் நியமனம் செய்யப்பட்ட அனைத்து அமைச்சர்களுடனும் இந்த செஸ்வரி அறவீடு செய்தல் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. பல்வேறு சந்தர்ப்பங்களில் இந்த அறவீட்டிற்கு தேவையான நிதியமைச்சரின் இணக்கத்தை பெற்றுக்கொள்வதற்கு அதிகாரசபை முயற்தி எடுத்தது. இவ்வாறு இந்த கருதுகோள்களை செயற்படுத்துவதற்கு தேவையான அமைச்சரவை பத்திரமும் தயாரிக்கப்பட்டு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அமைச்சு இணங்கியதுடன் இந்த அறவீடு அதிகார சபையினால் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஸெஸ் வரியை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும். |
| (v) | சட்டத்தின் பிரிவு 61(1) இணங்க கட்டிடங்கள் மற்றும் வளாகங்களுக்கு உட்சென்று சோதனை மேற்கொள்ளல், கணிப்பீடு செய்தல், பரிசோதனை | வலுச்சக்தி அளவுகோல் பிரமாணங்களின் படி வலுச்சக்தித் தகவல்கள் வெளியிடுவதற்கு ஏதேனும் நிறுவனங்களினால் முடியாமல் | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க வலு செயற்திறனற்ற இடங்கள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளல் மற்றும் விசாரணை மேற்கொள்வதற்காக சபையின் எழுத்துமூல அதிகாரத்தின் மூலம் விஷேட உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | போன சந்தர்ப்பங்களில் அல்லது வலுச்சக்தி அளவுகோல் கடைபிடிக்கப்படுகின்றதென உறுதிப்படுத்துவதற்கான ஏதேனும் நிறுவன வளாகத்திற்கு நுழைந்து பரிசோதனை மேற்கொள்வதற்கு, தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு, தகவல்களை உறுதிப்படுத்துவதற்கு ஏதேனும் பரிசோதனை ஒன்று அதிகாரசபையினால் முறைப் பிரகாரம் அங்கீகாரம் அளிக்கப்பட்ட வலு முகாமையாளர் ஒருவருக்கு அல்லது வலு சேவை வழங்குனருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, இந்த விதிகளின் மூலம் தாக்கம் ஏற்படுத்தும் ஏதேனும் வளாகங்களுக்கு தேவையான தகவல்கள் வழங்கப்படாத சந்தர்ப்பங்களில் அதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான அனைத்துச் செய்முறைகளும் செயற்படுவதற்கு தயார் நிலையில் காணப்படுகின்றது. | தேவையான நடவடிக்கை எடுத்தல். |
| (vi) | சட்டத்தின் பிரிவுகள் 47(1) மற்றும் 67 இணங்க வலு செயற்திரனிற்கான செயற்திட்டத்திற்கு கடன் விண்ணப்பிக்கும் முதலீட்டாளர்களுக்கு தேவையான பிணை வழங்கும் குறிக்கோளுடன் நிறுவப்பட்டிருந்த நிலைபெறுதரு வலு பிணை நிதியத்தின் அலுவல்களை செயற்படுத்துவதற்காக அமைச்சரினால தயாரிக்கப்பட வேண்டிய பிரமாணங்கள் தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை. | நிலைபெறுதகு வலு பிணை நிதியம் நிறுவுவதற்கான வரைபு தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதனை சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (vii) | சட்டத்தின் பிரிவு 46(3) இணங்க இலங்கை நிலைபெறுதகு வலு | நிலைபெறுதகு வலு நிதியம் நிறுவுவதற்கு உரிய | சட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட |

| | | | |
|---|---|---|---|
| | நிதியத்தின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய கருமங்கள் ஆகிய தெரிவு செய்யப்பட்ட மீண்டும் வினைப்படுத்தக்கூடிய வலுச்சக்தியின் அடிப்படையில் வலு மாற்று பொறித்தொகுதிகளுக்கான உதவி தொகை வழங்குதல், வலு செயற்திறனுடனான உபகரணங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை பயன்படுத்தலை மேம்படுத்துவதற்கான உதவி வழங்குதல், கைத்தொழில் மிகை உஷ்ண உள்ளீடுகள் உட்பட எரிபொருளுக்கு மற்றுவதற்கான மூலதன உதவி வழங்கல் மற்றும் வலு பாதுகாப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக மற்றும் நாட்டில் அனைத்து பிரதேசங்களிலும் கிராமிய வலுச் சேவையை முன்னேற்றுவதற்காக ஏதேனும் சங்கம் ஒன்றிற்கு அல்லது சமூக அடிப்படை அமைப்பொன்றிற்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவு அல்லது வேறேதேனும் சமமான நிதியுதவுகள் வழங்குதல் ஆகிய கருமங்கள் ஏதும் மீளாய்வாண்டின் போது மேற்கொண்டிருக்கவில்லை. | வழிகாட்டல் கோவை தயாரித்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன், அதனை முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. முகாமைத்துவச் சபையின் பரிந்துரைகள் மற்றும் பிரேரணைகளை உட்படுத்திய பின்னர் இதனை எதிர்காலத்தில் வினைப்படுத்துவதற்கான அலுவல்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. அதேபோல் 2023 ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட பின்வரும் செயற்திட்டங்கள் 2024 ஆண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.<br>1. உஸ்ஸான 03 நீர்ப்பாசன செயற்திட்டங்கள் (2024 ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.)<br>2. 500Kw சூரிய சக்தி செயற்திட்டமொன்று ஹம்பாந்தோட்டை பூங்காவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.<br>3. கலமுதுன கிராமத்திற்கு மின்சாரம் வழங்குதல் (பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.) | கருமங்களுக்காக மாத்திரம் நிதியம் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (viii) | சட்டத்தின் 30 ஆவது பிரிவிற்கு இணங்க அதிகார சபையினால் 15 சிறியளவிலான நீர் மின் உற்பத்தி செயற்திட்டத்திற்காக 1979 இன் 08 ஆம் இலக்க அரச காணிகள் தனதாக்கல சட்டத்தின் கீழ் 14.13 ஹெக்டயர் காணி தனதாக்கல் அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவில் அந்தக் காணியை முறைப் பிரகாரம் தனதாக்கியிருக்கவில்லை. அதன் காரணத்தினால் சட்டத்தின் பிரிவு 32 இற்கு இணங்க இந்த காணிகளை குத்தகைக்கு கொடுப்பதற்கு அல்லது அனுபவித்தலை ஒப்படைத்து வருடாந்த குத்தகைத் தொகையொன்று அறவீடு | அதிகார சபையினால் அனுபவித்தலை பெற்றுக்கொண்டிருந்த 45 காணித் துண்டுகளின் 16 காணித் துண்டுகள் சரியாக குத்தகைக்கு கொடுக்கப்பட்டுள்ளதுடன், மீதியான 29 காணித் துண்டுகள் சட்டத்தின் 09 ஆவது பிரிவின் கீழ் உரிமையை பரிசோதனை செய்தல் பூர்த்தி செய்த பின்னர் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த பின்னர் நிலுவை குத்தகை உட்பட உரிய குத்தகைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். கிரிஓயா | காணி தனதாக்கல் அலுவல்கள் விரைவாக பூர்த்தி செய்யப்பட்டு குத்தகைக்கு வழங்கி குத்தகை தொகை அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்கு அதிகாரசபைக்கு முடியாமல் இருந்தது. மேலும், குத்தகைக்கு கொடுத்திருந்த வேறொரு காணியொன்று தொடர்பாக 2021 ஆண்டு முதல் 2024 மார்ச் வரை அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட ரூபா 1.3 மில்லியனிற்கான குத்தகை மற்றும் தாமதக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | செயற்திட்டத்தின் நிர்மாண வேலை அலுவல்கள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், குத்தகை தொகையை செலுத்தும் படி அதிகார சபையினால் செயற்திட்ட வழங்குனருக்கு அறிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | கூரைகளின் மீது சூரியசக்தி முறைமை தொடர்பு பெற்றுக்கொள்வதற்கு தேவையான வளையமைப்பை நவீனமயப்படுத்துவதற்கு ரூபா 50 மில்லியன் தொகை இலங்கை மின்சார சபைக்கு முன்னைய ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த கருமங்களின் முன்னேற்றம் பற்றி தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இதன் முன்னேற்றத்தை அறிவதற்காக மின்சார சபைக்கு கடிதம் அனுப்பப்பட்டது. எனினும், அதன் முன்னேற்றம் பற்றி அறிக்கையொன்று அதிகார சபைக்கு கிடைத்திருக்காததுடன், நினைவூட்டும் கடிதமும் மின்சார சபைக்கு அனுப்பப்பட்டது என. | குறிப்பிட்ட கருமங்கள் தொடர்பாக முன்னேற்றம் கால ரீதியாக தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.3 சர்ச்சைக்குரிய தன்மையுடைய கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மன்னார் மற்றும் பூனகரியில் 500 மொகா வொட் கொள்திறனுடைய மீள்புத்தாக்க வலு நிலையங்கள் நிர்மாணிப்பதற்காக வெளிநாட்டுத் தனியார் முதலீட்டாளர் ஒருவருக்கு வழங்குவதற்கு 2022 மார்ச் 15 திகதி அமப/22/0380/301/008 இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. இது வரை அதிகாரசபையினால் மேற்கூறிய செயற்திட்டத்திற்கு மேற்கொண்டிருந்த ஆரம்ப அபிவிருத்தி கருமங்களுக்காக மேற்கொண்டிருந்த 747,733 அ.டொ. களுக்கு சமமான ரூபா 261.7 மில்லியன் தொகை செயற்திட்ட அபிவிருத்தியாளரிடம் 2022 நவம்பர் 08 திகதி இலக்கம் குறிப்பிடப்படாத கடிதத்தின் மூலம் விண்ணப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டிற்கான | 425,381 அ.டொ. அமைந்துள்ள முறை இத்துடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பெறுமதிகளை குறைப்பது தொடர்பான இணக்கப்பாடு தொடர்பான விபரங்கள் தாமதமின்றி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் செயற்றிட்ட அபிவிருத்தியாளரிடம் பெற வேண்டியிருந்த 425,381 அ.டொ. பெறுமதிக்கு சமமான ரூபா 112.5 மில்லியன் தொகை என 322.352 அ.டொ. குறைவாக நிதிக்கூற்றுக்களில் குறிப்பொன்றாக வெளிப்படுத்தப்பட்டிருந்தது. அந்த பெறுமதியை குறைப்பதற்காக செயற்றிட்ட அபிவிருத்தியாளரிடம் மேற்கொள்ளப்பட்டிருந்த இணக்கப்பாடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |

### 3.4 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அதிகாரசபையின் குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக நேர் பங்களிப்பினை பெற்றுக்கொள்ளக்கூடிய பிரதி / உதவிப் பணிப்பாளர் (பொறியியலாளர்) 48 அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளில் 22 பதவிகளும், அங்கீகரிக்கப்பட்ட 17 தொழில்நுட்ப உதவியாளர் பதவிகளில் 09 பதவிகளும் 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளாறு வெற்றிடமாக காணப்பட்டது. | அதிகாரசபையின் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை 2020 ஆகஸ்ட் மாதம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக நாடு முடங்கப்பட்டதால் வெளி ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளல் தாமதமாகியது. எவ்வாறாயினும், 2021 மே மாதத்தில் 16 பொறியியலாளர்கள் நேர்முகப் பரீட்சையின் மூலம் தெரிவு செய்யப்பட்டு 2022 ஆண்டு நியமனம் வழங்கப்பட்டது. 2022 ஆண்டில் அரசினால் ஆட்சேர்ப்பு வரையறுக்கும் சுற்றறிக்கை வெளியிட்ட பின்னர் அத்தியவசினமான பதவிகளுக்காக ஆட்சேர்ப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோளின் படி உதவிப்பணிப்பாளர் (பொறியியலாளர்) 06 பேர் மற்றும் தொழில்நுட்ப உதவியாளர் 05 பேர் ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது. | உச்ச சேவை மட்டமொன்றை பேணிச் செல்லக்கூடியவாறு பதவியணிகளை முகாமைத்துவம் செய்ய வேண்டும். |

## 4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 – 2025 கூட்டிணைந்த திட்டத்தின் படி 90 மின்சார வாகன பட்டரி மின்னேற்ற நிலையங்களை அபிவிருத்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் நிலையம் ஒன்றேனும் நிர்மாணித்திருக்கவில்லை. மேலும், மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் அடங்கியுள்ள மீள்புத்தாக்க வலு செயற்திட்ட அபிவிருத்தி தொடர்பான 03 கருமங்களின் நடவடிக்கை ஒன்றேனும் மேற்கொண்டிருக்காததுடன், மீளாய்வாண்டின் போது வேறு 24 செயற்திட்ட கருமங்களில் முன்னேற்றம் 10 சதவீதம் முதல் 54 சதவீதத்திற்கும் இடைப்பட்ட குறைந்த பெறுமதியொன்றில் காணப்பட்டது. | எதிர் காலத்தில் செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | கூட்டிணைந்த திட்டத்தின் படி திட்டமிடப்பட்ட கருமங்கள் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டும். |